# அலுவலகக் கடிதம்

உங்கள் பகுதிக்கு  சாலை / மின்விளக்கு வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்குக்  கடிதம் எழுதுக.

அனுப்புநர்

ஊர்ப்பொதுமக்கள்,
எண் 15,  கம்பன் குடியிருப்பு,
செங்கல்பட்டு.

பெறுநர்

உயர்திரு. நகராட்சி ஆணையர் அவர்கள்,
செங்கல்பட்டு நகராட்சி அலுவலகம்,
செங்கல்பட்டு.

பொருள்: சாலை / மின்விளக்கு வசதி வேண்டுதல் சார்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். நாங்கள் வசிக்கும் கம்பன் குடியிருப்புப் பகுதியானது செங்கல்பட்டில் இருந்து ஒன்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.  இங்கு ஏறத்தாழ 300 வீடுகள் உள்ளன.  எங்கள் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் குண்டும் குழியுமாய் சேரும் சகதியுமாய் மிக மோசமான நிலையில் பழுதடைந்து உள்ளன.  இதனால் அடிக்கடி விபத்துகள் நடைபெறுகின்றன.  இதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும், மருத்துவமனைகளுக்குச் செல்லும் நோயாளிகளும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.  மேலும் தெருவிளக்குகள் சரிவர எரியாததால் முதியோர்கள், பெரியவர்கள், குழந்தைகள் தெருக்களில் நடக்க முடியாமல் அவதிப்படுகின்றனர்.  இருட்டைப் பயன்படுத்தி வழிப்பறிக் கொள்ளைகளும் திருட்டு நிகழ்வுகளும் அதிகரித்து வருகின்றன.

எனவே பழுதுபட்ட சாலைகளைச் சீர்ப்படுத்தியும், போதிய மின்கம்பங்களையும், மின் விளக்குகளையும் பொருத்தியும் மக்களின் இடையூறுகளைப் போக்கி அடிப்படைத் தேவையை நிறைவேற்றித் தரும்படி இப்பகுதி மக்கள் சார்பாக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
ஊர் பொதுமக்கள்,
செங்கல்பட்டு.

நாள்:
இடம்: செங்கல்பட்டு.

உறைமேல் முகவரி:

பெறுநர்

உயர்திரு நகராட்சி ஆணையர் அவர்கள்,
செங்கல்பட்டு நகராட்சி அலுவலகம்,
செங்கல்பட்டு.